## பிப். 20 ஆர்ப்பாட்டம்; மார்ச் 1-ல் மறியல்: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவிப்பு

First Published : 05 Feb 2010 07:52:01 AM IST
Last Updated : 05 Feb 2010 09:14:39 AM IST

நாமக்கல், பிப். 4: பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மார்ச் 1-ம் தேதி மாநில அளவிலான மறியல் போராட்டம் நடத்தவுள்ளது.

மேலும், வரும் 20-ம் தேதி பால்கூட்டுறவு சங்கங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லை அடுத்த வையப்பமலையில் வியாழக்கிழமை நடந்த தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டக் குழு கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக் கூட்டத்துக்கு, மாவட்டக் குழு உறுப்பினர் எஸ். கந்தசாமி தலைமை வகித்தார். மாநிலச் செயலர் ஏ.எம். முனுசாமி, போராட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கிப் பேசினார். மாவட்ட நிர்வாகிகள் பெருமாள், ஆதிநாராயணா, ரங்கசாமி, பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த முத்துசாமி, மாரிமுத்து உள்ளிட்டோர் ஆலோசனை நடத்தினர்.

பின்னர், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

விவசாயிகளின் அனுபவ நிலங்களுக்கு பட்டா வழங்க வேண்டும், நிலமற்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும், பல ஆண்டுகளாக குடியிருக்கும் நபர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 20-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை சைக்கிள் பிரசாரம், நடைபயணம், கிராமக் கூட்டங்கள், பேரணி ஆகியவை நடத்தப்படும். இதன் தொடர்ச்சியாக, மார்ச் 1-ம் தேதி மாநில அளவில் மறியல் போராட்டம் நடைபெறுகிறது. நாமக்கல் மாவட்டத்தில், ராசிபுரம், திருச்செங்கோடு, பரமத்தி வேலூர், கொல்லிமலை, நாமக்கல் ஆகிய 5 மையங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

பசும்பால் கொள்முதலில் லிட்டருக்கு ரூ. 5-ம், எருமைப் பால் கொள்முதலில் லிட்டருக்கு ரூ. 8-ம் உயர்த்தி வழங்க வேண்டும். கால்நடைகளுக்கான தீவனங்கள் மானியவிலையில் தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும். கறவை மாடுக்கு மானிய கடன் வழங்க வேண்டும், பால் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும், சங்க நிர்வாக செலவுக்காக லிட்டருக்கு ரூ. 1 மானியமாக வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 20-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை பால் கூட்டுறவு சங்கங்கள் முன்பாக கறவை மாடுகளுடன் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். இக் கோரிக்கைகளுக்காக மார்ச் 23-ம் தேதி சென்னையில் நடைபெறும் மறியல் போராட்டத்தில் விவசாயிகள் திரளாக பங்கேற்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், கரும்புக்கு டன்னுக்கு ரூ. 2 ஆயிரம் வழங்கக்கோரி மதுரையில் வரும் 7-ம் தேதி நடைபெறும் மாநாட்டில் திரளாக பங்கேற்பது, மரபணு மாற்ற கத்திரிக்காயை அனுமதிக்க மாட்டோம் என தமிழக அரசை அறிவிக்க வலியுறுத்தி திருச்செங்கோட்டில் ஆர்ப்பாட்டம் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கரும்பு டன்னுக்கு ரூ. 2,250 வழங்க வலியுறுத்தல்

First Published : 05 Feb 2010 09:13:10 AM IST

குளித்தலை, பிப். 4: கரும்பு டன்னுக்கு ரூ. 2,250 வழங்க வேண்டுமென பாரதிய கிஷான் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கரூர் மாவட்ட பாரதிய கிஷான் சங்க செயற்குழுக் கூட்டம் குளித்தலையில் அண்மையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் எம். சண்முகம் தலைமை வகித்தார்.

ஆலோசனைக் குழுத் தலைவர் மு. துரைசாமி, செயலர் எம். பரமசிவம், அமைப்பாளர் எம். வீரமலை, ஒன்றியத் தலைவர் எம். மனோகரன், செயலர் பி. கணேசன், பொருளர் எம். ஆறுமுகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் பாரதிய கிஷான் சங்கம் சார்பில், திருச்சியில் பிப். 18 முதல் 21 வரை நடைபெறவுள்ள அகில பாரத பிரதிநிதி சபை மாநாடு கூட்டத்தில் விவசாயிகளை பெருமளவில் பங்கேற்க வைப்பது.

சங்கம் சார்பில் கடந்த 2009-ம் ஆண்டு மத்திய, மாநில அரசுகளுக்கும், அரசு, தனியார் சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 2 ஆயிரமும், வெட்டு கூலி வண்டி வாடகை ஆகியவற்றை ஆலையே ஏற்க வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டிருந்தது.

இதையடுத்து, பெட்டவாய்த்தலை ஈஐடி சர்க்கரை ஆலை கரும்பு டன்னுக்கு ரூ. 1,750-ம், வண்டி வாடகையும் தருவதாக வெளியிட்டுள்ள அறிவிப்பை வரவேற்பது.

எனினும், வெட்டுக்கூலி தற்போது இரு மடங்காக உயர்ந்துள்ளது. எனவே, கரும்பு டன்னுக்கு ரூ. 2,250 வழங்க வேண்டும். இல்லையெனில், வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகம் ஏற்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**விதை கிராமத் திட்ட பயிற்சி முகாம்**

First Published : 05 Feb 2010 03:03:42 AM IST

திருவண்ணாமலை, பிப்.4:  செய்யாறு தாலுகா புரிசை கிராமத்தில் வேளாண் துறை சார்பில் விதை கிராமத் திட்ட பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

ஊராட்சித் தலைவர் லட்சுமணன் தலைமை தாங்கினார். அனக்காவூர் வேளாண் விரிவாக்க அலுவலர் கே.ராயர் வரவேற்றார்.

விதைச்சான்று உதவி இயக்குநர் அ.சுப்பிரமணியம், அலுவலர் என்.ராமலிங்கம், கீழ்நெல்லி வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் ஜோதிமணி, உதவி வேளாண் அலுவலர் ஆர்.இளங்கோ உள்ளிட்டோர் பேசினர்.

**தமிழக விவசாயிகள் சங்கம் தொடக்கம்**

First Published : 05 Feb 2010 12:47:43 AM IST

உளுந்தூர்பேட்டை, பிப். 4: தமிழக விவசாயிகள் சங்க தொடக்க விழா மற்றும் அடையாள அட்டைகள் வழங்கும் விழா உளுந்தூர்பேட்டை வட்டம் ஆலங்குப்பம் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

÷விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் எடை போடுதல் மற்றும் சாக்கு மாற்றுதல் என்ற பெயரில் விவசாயிகளிடம் பணம் வசூல் செய்வதை கைவிடுதல், ஆலங்குப்பம் கிராமத்தில் பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வரும் மந்தைவெளி நிலத்தை தனிநபர் ஆக்கிரமித்து வாங்கியுள்ள பட்டாவை ரத்து செய்து

பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்தல், விவசாயிகளுக்கு நல்ல திட்டங்களை கொண்டு வந்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்தல், கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3000-மும், நெல் ஒரு குவிண்டாலுக்கு ரூ. 3000-மும், மரவள்ளி கிழங்கு டன் ஒன்றுக்கு ரூ.15000-மும் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுதல், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை அதிமாக உள்ளதால் காலிப் பணியிடங்களில் போதிய ஆசிரியர்களை நியமித்தல் உள்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

÷விழாவுக்கு மாவட்டத் தலைவர் ந.சத்துருசங்காரம் தலைமை வகித்தார். பசுமைப் புரட்சியாளர் ஆ.நா.துரைராஜன், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் இரா.ராமமூர்த்தி, ஊராட்சி மன்றத் தலைவர் வளர்மதி முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் வி.மாணிக்கராஜ் வரவேற்றார். மாநிலத் துணைத் தலைவர் ராமுகவுண்டர், வழக்கறிஞர் பூமாலை குமாரசாமி, வழக்கறிஞர் ஆர்.முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

**பயிர்க் கடன் வழங்கும் விழா**

First Published : 05 Feb 2010 12:47:27 AM IST

செஞ்சி, பிப். 4: செஞ்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் உழவர் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு பயிர்க் கடன் வழங்கும் விழா வங்கி வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

÷விழாவிற்கு ஓய்வு பெற்ற காவல்துறை கண்காணிப்பாளர் தனுசு முன்னிலை வகித்தார். செஞ்சி பேரூராட்சி தலைவர் செஞ்சி மஸ்தான் பயிர்க் கடன் வழங்கி சிறப்புரையாற்றினார்.

÷செல்லபிராட்டி, இல்லோடு, மேல்களவாய், அஞ்சாஞ்சேரி, பொன்பத்தி காரியமங்கலம், பொன்பத்தி உள்ளிட்ட 12 உழவர் விவசாய கூட்டுப்பொறுப்புக் குழுக்களுக்கு ரூ. 12.40 லட்சமும், தனிப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 10.93 லட்சமும், 10 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ. 11.90 லட்சமும் கடன் தொகை வழங்கப்பட்டது.

÷விழாவில் செஞ்சி கூட்டுறவு விவசாய வங்கி செயலர் என்.ரவிச்சந்திரன் மற்றும் வங்கி ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

**நோய் தாக்கிய விளை நிலங்களை முறையாக கணக்கெடுக்கக் கோரிக்கை**

First Published : 04 Feb 2010 11:09:32 AM IST

திருவாடானை, பிப்.3: திருவாடானை பகுதியில் நோயால் பாதிக்கபட்ட விளை நிலங்களை அதிகாரிகள் முறையாகக் கணக்கெடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுகாவில் சுமார் 40 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரளவில் விவசாயப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

இதில் பெரும்பாலான இடங்களில் நெற்பயிர்களில் நெல் பழம், புகையான் நோய் தாக்குதல் காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இதுதொடர்பாக விவசாயிகள் பல்வேறு போராட்டங்கள் நடத்தியும், புகார் மனுக்கள் கொடுத்தும் வந்தன.

இதைத்தொடர்ந்து தற்போது மாவட்ட நிர்வாகம் வேளாண் மற்றும் வருவாய்துறை அதிகாரிகள் மூலமாக பாதிப்படைந்த விவசாய நிலங்களை கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதில் 75 சதவீதம் பாதிப்படைந்த வயல்களை 40 சதவீதம் மட்டுமே பாதிப்படைந்துள்ளதாக கணக்குக் காட்டுகின்றனர்.

இதனால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

இதுகுறித்து திருவாடானை ஒன்றிய முன்னாள் கவுன்சிலரும் விவசாய சங்க வட்டார துணைத் தலைவருமான நாகநாதன் கூறுகையில், திருவாடானை பகுதியில் 70 சதவீத நிலங்களில் இந்த நோய் தாக்குதல் காரணமாக நெற்கதிரில் நெல் மணிகள் இல்லாமலும் அழுகிய நிலையிலும் உள்ளன.

இந்நிலையில் 40 சதவீதம் தான் பாதிப்படைந்துள்ளன என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

எனவே அதிகாரிகள் முறையாக பாதிக்கப்பட்ட வயல்களைக் கணக்கெடுத்து விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கவேண்டும்.

இல்லையெனில், பெரும் போராட்டம நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றார்.

### சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பேரணி

First Published : 04 Feb 2010 11:08:32 AM IST

கமுதி,பிப்.3: கமுதி ரஹ்மானியா மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணி நடத்தினர்.

பள்ளித் தாளாளர் வி.என்.ஏ. ஆயிஷா பீவி தலைமை வகித்தார். முதல்வர் எம்.சிக்கந்தர் முன்னிலை வகித்தார். வி.என். அப்துல் ரஹ்மான் பட்டேல் கல்விச் சங்கத் தலைவர் எஸ்.என்.முகம்மது முஸ்தபா கொடியசைத்து பேரணியைத் துவக்கி வைத்தார்.

முக்கிய வீதிகள் வழியாக மாணவ, மாணவியர் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கோஷங்களை எழுப்பியபடி சென்றனர்.

பேரணிக்கான ஏற்பாடுகளை முதுநிலை ஆசிரியர் வி. என்.யு.முகம்மது மீரா மற்றும் ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

### மரபணு மாற்ற கத்திரிக்காய் அனுமதியில் அவசரம் ஏன்?

First Published : 04 Feb 2010 08:41:56 AM IST
Last Updated : 04 Feb 2010 09:51:57 AM IST

உதகை, பிப். 3: மரபணு மாற்ற கத்திரிக்காயை அனுமதிப்பது தொடர்பான முழு அளவிலான ஆய்வுகள் முடிவடையாத நிலையில், அவற்றை அனுமதிக்க சில அமைச்சர்களும், அதிகாரிகளும் அவசரம் காட்டுவதாக குன்னூரில் நடைபெற்ற விவாத மேடையில் குற்றம் சாட்டப்பட்டது.

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் குன்னூரிலுள்ள ஒய்எம்சிஏ அரங்கில் மரபணு மாற்ற கத்திரிக்காய் குறித்த விவாத மேடை நடத்தப்பட்டது. இதில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாநில துணைத்தலைவர் சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். அப்போது அவர் பேசுகையில், கடந்த கால வரலாற்றை புரட்டி பார்க்கும்போது ஒரு புதிய தொழில்நுட்பம் வரும்போது அதை ஒரு சாரார் எதிர்ப்பது வழக்கமாகி வருகிறது. இருப்பினும் மரபணு மாற்ற உணவுப்பொருட்களை ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டில் பயிர் செய்யவும், விற்பனைக்கும் தடை விதித்துள்ளன. அதைப்போலவே மரபணு மாற்ற கத்திரிக்காயை இந்தியாவில் பயிரிட அனுமதிக்கக்கூடாது என்றார்.

குன்னூர் பாஸ்டியர் ஆய்வக உதவி இயக்குநர் டாக்டர் வெங்கட்ரமணா பேசுகையில், மரபணு மாற்ற கத்திரிக்காயை பொறுத்தமட்டில் அரைகுறை ஆராய்ச்சிகள் மட்டும் செய்யப்பட்டுள்ளன. பன்னாட்டு நிறுவனங்களின் வியாபார நோக்கத்திற்காக அவசர கதியில் இந்தியாவில் அவற்றை அறிமுகப்படுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. இதை மக்கள் எதிர்க்க வேண்டுமென்றார்.

பாஸ்டியர் ஆய்வக இளம் விஞ்ஞானி  டாக்டர் சிவானந்தா பேசுகையில், கத்திரிக்காயின் மரபணுவுடன் பாசில்லஸ் துரங்கசீயஸ் என்ற மண்ணிலுள்ள பாக்டீரியாவின் மரபணுவை இணைத்து பி.டி. கத்திரிக்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. கத்திரிக்காயில் உண்டாகும் பூச்சிகளை கொல்லும் ஆற்றல் கொண்ட ஒருவித விஷப்பொருளை உள்ளடக்கிய புரதத்தை உற்பத்தி செய்யும் இந்த பாக்டீரியா, கத்திரிக்காயை உண்ணும் மனித உடலிலும் எத்தகைய மாற்றங்களை உருவாக்கும் என்பதைக் குறித்த சரியான தகவல்கள் இல்லை என்றார்.

குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி பேராசிரியை டாக்டர் சுஜாதா பேசுகையில், நம் நாட்டிலுள்ள 250க்கும் மேற்பட்ட கத்திரிக்காய் இனங்கள், இந்த பி.டி. கத்திரிக்காயால் முற்றிலும் அழியுமெனவும், சுவையற்ற இந்த உணவுப்பொருளை நாம் அனுமதிக்கக்கூடாது எனவும் குறிப்பிட்டார்.

அறிவியல் இயக்க நீலகிரி மாவட்ட செயலர் ராஜு பேசுகையில், பி.டி.கத்திரிக்காயை அனுமதிப்பது குறித்து முடிவெடுக்க மத்திய அரசு 30 விஞ்ஞானிகள் கொண்ட குழுவை அமைத்துள்ளது. உச்சநீதிமன்றமும் உஷா பார்கவா என்ற விஞ்ஞானியை பார்வையாளராக நியமித்துள்ளது. பி.டி. கத்திரிக்காயை அனுமதிக்கும் முன்னர் 30 விதமான சோதனைகள் செய்யப்பட வேண்டும். ஆனால், இதுவரை 12 விதமான சோதனைகள் மட்டுமே நடத்தப்பட்டுள்ளன. அதற்குள் சில மத்திய அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பி.டி.கத்திரிக்காயை உடனடியாக அனுமதிக்க வேண்டுமென வற்புறுத்துகின்றனர். பன்னாட்டு நிறுவனங்கள் இந்திய மக்களின் நல்வாழ்வை வியாபாராமாக்கி பணம் சம்பாதிப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

குன்னூர் நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர் மனோகரன் பேசுகையில், இதுபோன்ற விஷப் பொருட்களை சோதித்து பார்க்க இந்திய மக்கள் எலிகள் அல்ல எனவும், இந்தியா பிற நாடுகளின் குப்பைத் தொட்டியாக மாறி வருவதாகவும் குறிப்பிட்டார்.

பாஸ்டியர் ஆய்வக ஆராய்ச்சியாளர் ஜெகந்நாதன் பேசுகையில், இந்தியாவிலுள்ள குழந்தைகளில் 46 சதத்தினர் ஊட்டச்சத்து குறைந்தவர்களாக உள்ளதாக ஐ.நா. சபை அறிவித்துள்ளது. இதற்கு காரணம் நமது நாட்டில் ஊட்டச்சத்து மிக்க பொருட்கள் போதுமான அளவிற்கு இருந்தாலும் அதை வாங்கி உண்ணும் ஆற்றல் நமது மக்களில் பாதி பேருக்கு இல்லை எனவும் குறிப்பிட்டார்.

அறிவியல் இயக்க நீலகிரி மாவட்ட தலைவர் பெள்ளி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தேசிய பசுமைப்படை திட்ட ஒருங்கிணைப்பாளர் லட்சுமிநாராயணன், அருவங்காடு கிராமிய அபிவிருத்து இயக்க கள

நிர்வாகிகள், குன்னூர் பழங்குடியினர் மற்றும் மேம்பாட்டு அறக்கட்டளை அமைப்பினர் ஆகியோருடன் பொதுநல அமைப்பினரும், கல்லூரி மாணவியரும் திரளாக பங்கேற்று தங்கள் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

**பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் மையத்தை இடம் மாற்ற விவசாய அமைப்புகள் எதிர்ப்பு**

First Published : 05 Feb 2010 06:48:58 AM IST

குலசேகரம், பிப், 4: பேச்சிப்பாறையில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் மையத்தை திருப்பதிசாரத்திற்கு மாற்றும் நடவடிக்கைக்கு விவசாய அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இதுகுறித்து கன்னியாகுமரி மாவட்டம் ரப்பர் உற்பத்தியாளர் சங்கம், ரப்பர் விவசாயிகள் கூட்டமைப்பு, உழவர் மன்றம் ஆகிய அமைப்புகள் கூட்டாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு வியாழக்கிழமை அனுப்பிய மனு:

பேச்ச்சிபாறை பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யும் மையமாக உள்ளது. வாழை, தென்னை, மரச்சீனி, நெல், மிளகு, கிராம்பு, அன்னாசி, ஜாதிக்காய் மற்றும் மூலிகை என பல பயிர்கள் பேச்சிப்பாறையையொட்டிய களியல், ஆறுகாணி, குலசேகரம், அருமனை, சுருளகோடு, மாறாமலை பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது.

பேச்சிப்பாறை இப் பயிர்களின் மாதிரிப் பண்ணை அமைக்க உகந்த இடமாகவும் உள்ளது.

இதைக் கருதியே இங்கு வேளாண் அறிவியல் மையம் தொடங்கப்பட்டு கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

இந்நிலையில், தற்போது இந்த மையத்தை நாகர்கோவில் அருகேயுள்ள திருப்பதிசாரத்திற்கு மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. இதனால், இம் மையம் மூலம் இப் பகுதி விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த பயிற்சிகள் கிடைக்காமல் போகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும், திருப்பதிசாரத்திற்கு பேச்சிப்பாறை பகுதியில் உள்ள விவசாயிகள் சென்று பயிற்சி பெறுவது கடினம். எனவே, வேளாண் அறிவியல் மையம் தொடர்ந்து பேச்சிப்பாறையிலேயே இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வயல்களில் விவசாயிகளுக்கு நேரடி பயிற்சி**

First Published : 05 Feb 2010 06:44:30 AM IST

ஆறுமுகனேரி, பிப்.4: ஆறுமுகனேரி அருகேயுள்ள நல்லூர் கீழக்குளம் பாசன விவசாயப் பகுதியில் புதன்கிழமை வயல்வெளி பள்ளி துவக்கக் கூட்டம் நடைபெற்றது.

விவசாயத்தை ஊக்குவிக்க தமிழ்நாடு வேளாண் துறை பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி உள்ளது.

விவசாயிகளை அவர்கள் பகுதியிலேயே அதாவது வயல்களில் கூட்டங்கள் நடத்தி தகவல்களையும், தொழில்நுட்பங்களையும் நேரடியாக விளக்க முடிவு செய்து நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

நல்லூர் கீழக்குளம் பகுதியில் நடைபெற்ற வயல்வெளி கூட்டத்தில் திருச்செந்தூர் வேளாண் அலுவலர் நா.மலர்விழி, உதவி வேளாண் அலுவலர்கள் மு.ராஜேஷ் (ஆறுமுகனேரி), த.முத்து வடிவேல் முருகன் (திருச்செந்தூர்) மற்றும் உதவி வேளாண் அலுவலர் (விதைகள்) கண்ணன் ஆகியோர் பங்கேற்று விவசாயிகளை வயல்களுக்குள் அழைத்துச் சென்று பூச்சி மற்றும் நோய்களை நேரில் காண்பித்து அவற்றைக் கட்டுப்படுத்தும் முறையை விளக்கினர்.

நீர் சிக்கனம், செம்மை நெல் சாகுபடி பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினர். நிகழ்ச்சியில் விவசாயிகள் ஜெ.நடராஜன், பால்ராஜ்,

செல்வராஜ், ஓய்வு பெற்ற உதவி வேளாண் அலுவலர் பால்ராஜ், ஜெயக்கொடி, எஸ்.கார்த்திகேயன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இப்பகுதியில் ஒவ்வொரு புதன்கிழமையும் வயல்வெளி பள்ளிக் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### செம்மை நெல் சாகுபடிக்கு விவசாயிகளிடம் வரவேற்பு: ஆட்சியர்

First Published : 05 Feb 2010 06:43:11 AM IST

தூத்துக்குடி, பிப். 4: தூத்துக்குடி மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடி முறைக்கு விவசாயிகளிடம் நல்ல வரவேற்பு உள்ளதாக மாவட்ட ஆட்சியர் கோ. பிரகாஷ் வியாழக்கிழமை தெரிவித்தார். அடுத்த ஆண்டு மாவட்டத்தில் முழு பரப்பளவிலும் செம்மை நெல் சாகுபடி முறைக்கு மாற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், ஆழ்வார்திருநகரி மற்றும் தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியங்களில் வேளாண்மை துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆத்மா திட்டம், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டம், நெல் விதைப்பண்ணைகள், வேளாண் மருந்தகம் மற்றும் சிறு மண் ஆய்வுக்கூடம், டான்வாப் பண்ணை மகளிர் குழுக்களுக்கான மானியத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் நடைபெற்று வரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் கோ. பிரகாஷ் கள ஆய்வு மேற்கொண்டார்.

ஸ்ரீவைகுண்டம் ஒன்றியம் பழையகாயல், முக்காணி, பேரூர், திருச்செந்தூர் ஒன்றியம் ஆறுமுகநேரி, ஆழ்வார்திருநகரி ஒன்றியம் அங்கமங்கலம், குறுக்காட்டூர், தூத்துக்குடி ஒன்றியம் கூட்டுடன்காடு ஆகிய கிராம பகுதிகளில் வயல் வெளிகளில் அவர் ஆய்வு நடத்தினார்.

அப்போது செம்மை நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளை நேரில் சந்தித்து, இந்த திட்டத்தால் கிடைக்கும் நன்மைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் ஆட்சியர் கூறியதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடி முறைக்கு விவசாயிகளிடம் நல்ல வரவேற்பு உள்ளது.

மாவட்டத்தில் நெல் சாகுபடி பரப்பு குறியீடு 19 ஆயிரம் ஹெக்டேர் ஆகும்.

இதுவரை 19,081 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடி 8200 ஹெக்டேர் குறியீடு ஆகும். ஆனால், மாவட்டத்தில் 8230 ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு மொத்த நெல் சாகுபடி பரப்பும் செம்மை நெல் சாகுபடி முறைக்கு மாற நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்டத்தில் ஆத்மா, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டம் போன்ற மத்திய அரசின் பல்வேறு மானியத் திட்டங்கள் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாவட்டத்தில் உள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களிலும் வேளாண் மருந்தகம் மற்றும் சிறு மண் ஆய்வுக்கூடம் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டு, இதுவரை 5 ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர்.

இந்த ஆய்வின் போது வேளாண்மைத் துறை இணை இயக்குநர் லூயிஸ் ராஜரத்தினம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) தனசிங் டேவிட், வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயசுந்தர், ஆத்மா திட்ட முதன்மை அதிகாரி ஜோசப் நசரேன் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

**கிளேடிஓலஸ் மலர் சாகுபடியாளர் சங்கம் தொடக்கம்**

First Published : 05 Feb 2010 12:48:24 AM IST

சிதம்பரம், பிப். 4: அண்ணாமலைப் பல்கலைக்கழக கிராமப்புற வேளாண் விரிவாக்க திட்ட விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன் வாயிலாக வட மாநில வண்ண மலரான கிளேடிஓலஸ் மலர் சாகுபடி ஜம்மு மாநில விஞ்ஞானி மனோஜ்நாசர் உதவியுடன் சிதம்பரத்தை அடுத்த சி.முட்லூர் கிராமத்தில் 2007-ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இதன் முயற்சியாக பல முன்னோடி விவசாயிகள் தோட்டங்களில் கிளேடிஓலஸ் மலர் சாகுபடி செய்யப்பட்டு தற்போது சந்தையில் நல்ல விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

÷இந்நிலையில் சிதம்பரத்தை அடுத்த சி.முட்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் கிளேடிஓலஸ் மலர் சாகுபடியாளர்கள் சங்க தொடக்க விழா சனிக்கிழமை நடைபெற்றது.

÷விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன் தலைமை வகித்துப் பேசுகையில்,""சிறு மற்றும் குறு விவசாயிகள் இணைந்து இம்மலர் சாகுபடிக்கான எளிதான விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள முடியும். மேலும் விவசாயிகள் ஒற்றுமையுடன் செயல்பட்டு கிளேடிஓலஸ் மலர் விற்பனை வாயிலாக அதிக பொருளாதார பயன்கள் பெற முடியும்"என்றார்.

÷விழாவில் சங்கத் தலைவராக முன்னோடி விவசாயி சீனுவாசப்பெருமாளும், கெப்ரவத் தலைவர் மற்றும் தொழில்நுட்ப ஆலோசகராக விஞ்ஞானி மனோஜ்நாசரும், விரிவாக்க ஆலோசகராக தி.ராஜ்பிரவீனும் தேர்வு செய்யப்பட்டனர். "கடலோர தமிழகத்தில் ஒரு வண்ணப்புரட்சி' என்ற விரிவாக்க கையேட்டை விவசாய சங்க கூட்டமைப்பு தலைவர் பி.ரவீந்திரன் வெளியிட அதனை வேளாண் ஆசிரியர் சாந்தி பெற்றுக்கொண்டார்.

தொடக்க விழாவில் 75 சிறு மற்றும் குறு விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். விவசாயி பானுசந்தர் நன்றி கூறினார்.

**மானிய விலையில் ரபி பருவ உளுந்து விதை**

First Published : 05 Feb 2010 12:48:05 AM IST

பண்ருட்டி, பிப். 4: பண்ருட்டி வட்டார விவசாயிகளுக்கு ரபி பருவத்துக்கு தேவையான உளுந்து விதை மானிய விலையில் வழங்கப்படுவதாக வேளாண்மை உதவி இயக்குநர் பி.ஹரிதாஸ் தெரிவித்துள்ளார்.

÷அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளது:

÷தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் டி-9 உளுந்து விதை 3 டன் பெறப்பட்டு பண்ருட்டி வட்டார விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

÷65 நாள்கள் வயதுடைய இந்த ரகத்தை சீரிய முறையில் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 600 கிலோவுக்கு மேல் மகசூல் பெற்று, குறைந்த நாளில், குறைந்த செலவில் ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை லாபம் பெறலாம். இதை கரும்பு, கொய்யா, பருத்தி, மணிலா, மரவள்ளி ஆகிய பயிர்களுடன் ஊடு பயிராகவும் சாகுபடி செய்யலாம்.

÷தனியாக பயிர் செய்ய ஏக்கருக்கு 8 கிலோ விதை போதுமானது, ஒரு கிலோ விதைக்கு ரூ.20 மானியம் வழங்கப்படுகிறது. விதை தேவைப்படும் விவசாயிகள் பண்ருட்டி வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி பயன்பெறலாம் என பி.ஹரிதாஸ் தெரிவித்துள்ளார்.

**வேளாண் விரிவாக்க மையங்களில் மானிய விலையில் விதை உளுந்து**

First Published : 05 Feb 2010 12:38:44 AM IST

கடலூர், பிப்.4: கடலூர் மாவட்ட வேளாண் விரிவாக்க மையங்களில் உளுந்து விதை இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. மானிய விலையில் விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம் என்று, மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் வியாழக்கிழமை அறிவித்தார்.

இதுதொடர்பாக ஆட்சியர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் தற்போது உளுந்து நஞ்சைத் தரிசிலும், இறைவைப் பாசனத்திலும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் 50 ஆயிரம் ஹெக்டேரில் உளுந்து சாகுபடி எதிர்பார்க்கப்படுகிறது.

பயறு வகைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, சான்று பெற்ற விதைகளை விதைப்பதன் மூலம், அதிக மகசூல் பெறலாம். விவசாயிகளின் தேவைக்காக வேளாண் விரிவாக்க மையங்களில் உளுந்து விதை இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தில், இந்த விதைகளுக்கு கிலோவுக்கு ரூ.20 மானியம் வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தி பயறு வகைகளில் அதிக மகசூல் பெறலாம் என்றும் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

### சரல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் கல்வி திட்ட நிகழ்ச்சி

First Published : 05 Feb 2010 06:49:15 AM IST

நாகர்கோவில், பிப்.4: சரல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் மற்றும் சுயஉதவிக் குழுவினருக்கான உறுப்பினர் கல்வி திட்ட நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தக்கலை சரக துணைப் பதிவாளர் ஆ. நீலகண்டபிள்ளை பேசியதாவது:

கூட்டுறவு சங்கமானது கிராமப்புற மக்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும் பல்வேறு கடனுதவிகளை செய்து வருகிறது.

கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விவசாயிகள் விவசாயக் கடன்களை பெற்று விவசாயத் தொழிலுக்கு பயன்படுத்தி அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் கடனை உரிய காலத்தில் திருப்பி செலுத்தி மீண்டும் கடன் பெற்று விவசாயத் தொழிலை ஊக்கப்படுத்த வேண்டும்.

கூட்டுறவு சங்கங்கள் சுயஉதவிக் குழுக்களுக்கு அதிகமான தொழில் கடன்களை வழங்கி வருகிறது என்றார் அவர்.

நிகழ்ச்சியில் இரு மகளிர் சுயஉதவிக் குழு கூட்டுப் பொறுப்புகளுக்கு ரூ.6 லட்சம் கடனுதவி வழங்கப்பட்டது.

மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் செ. செல்வின் ஜெயபாலன், கூட்டுறவு சார்பதிவாளர் கிரேஸ் வில்சம்மாள், சங்கச் செயலர் ஜே. ஜோஸ் ஞானதாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### பி.டி. கத்தரிக்காய் கூடாது: மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்தல்

First Published : 05 Feb 2010 01:01:59 AM IST
Last Updated : 05 Feb 2010 02:10:59 AM IST



சென்னை, பிப். 4: பி.டி. கத்தரி எனப்படும் மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயை இந்தியாவில் பயிரிடக் கூடாது என மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷை மருத்துவ நிபுணர்கள் குழு வியாழக்கிழமை சந்தித்து வலியுறுத்தியது.

டாக்டர் மீரா சிவா (புது தில்லி), டாக்டர் ஜி.பி.சிங் (சண்டிகர்),

டாக்டர் பாரத் ஷா (பரோடா), டாக்டர் ஜி.சிவராமன் (சென்னை) ஆகிய நால்வர் குழு, அமைச்சரைச் சந்தித்து எந்தந்த வகையில் பி.டி. நச்சு புரதம், பொது மக்களின் உடல் நலனில் பாதிப்பை உண்டாக்கும் என்பதை விரிவாக விளக்கினர். மேலும் குழந்தைகளுக்கு உடல் எடை குறையும் வாய்ப்பு மற்றும் ஒவ்வாமையை

பி.டி. கத்தரிக்காய் ஏற்படுத்தும் ஆபத்து குறித்தும் சான்றுகளுடன் விரிவாக விளக்கினர்.

சித்த, ஆயுர்வேத மருந்துகளில் நீண்ட காலமாக இப்போதுள்ள கத்தரிக்காய் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பது குறித்து சித்த மருத்துவ நிபுணரும் பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் தலைவருமான ஜி.சிவராமன் விளக்கினார். அதே சமயம், மத்திய அரசின் மரபணு மாற்ற தொழில்நுட்ப அனுமதிக் குழு (ஜிஇஏசி) வெளியிட்ட முடிவில், பி.டி. கத்தரியின் ஆல்கலாய்டுகள் பெருவாரியாக மாறியுள்ளதையும் இது கத்தரியின் மருத்துவக் குணத்தை மாற்றி விடும் ஆபத்தையும்

குறிப்பிட்டனர். இதனால் ஜீன் கலப்படமடைந்து அதே குடும்பத்தைச் சேர்ந்த பிற மருத்துவக் குணமுள்ள தாவரங்கள் பாதிக்கப்படும் அபாயத்தை அமைச்சரிடம் விவரித்தனர்.

மருத்துவ நிபுணர்கள் குழு கூறிய விஷயங்களை ஆவணப்படுத்திக் கொண்ட அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், வரும் 10-ம் தேதி முடிவை அறிவிப்பதாகத் தெரிவித்தார்.

**அக்மார்க் லைசென்ஸ் புதுப்பிக்க வேண்டுகோள்**

First Published : 05 Feb 2010 08:12:03 AM IST

பல்லடம், பிப். 4: அக்மார்க் முத்திரை பெற்றள்ள உரிமதாரர்கள் மார்ச் 31க்குள் உரிமத்தை புதுப்பிக்க வேண்டும் என்று அக்மார்க் வேளாண் அலுவலர் ( ரசாயனம் ) லீலாவதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கலப்பட பொருட்களில் இருந்து நுகர்வோரை பாதுக்காக மத்திய, மாநில அரசுகள் இணைந்து தரமான உணவு பொருட்களுக்கு அக்மார்க் சான்று வழங்குகிறது. இச்சான்றிழை பெற தூய்மையான தொழிற்கூடம், மூலப்பொருட்களை சுத்தப்படுத்த தரமான இயந்திரங்கள், தொற்று நோய் எதுவும் இல்லாத தொழிலாளர்கள் போன்ற ஏராளமான விதிமுறைகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும்.

அக்மார்க் தர சான்று முத்திரை உரிமம் பெற அரிசி, கோதுமை, பருப்பு, எண்ணெய், மசாலா உள்பட உணவு பொருட்கள் தயாரிப்பாளர்கள் அரசுக்கு ரூ.ஆயிரம் கட்டணமாக செலுத்த வேண்டும்.

உரிமத்தை 5 ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும். பல்லடம், உடுமலை, பொங்கலூர், சூலூர், சுல்தான்பேட்டை பகுதியில் உள்ள அக்மார்க் முத்திரை உரிமம் பெற்றவர்கள் பல்லடத்தில் உள்ள மாநில அக்மார்க் ஆய்வு கூடத்தில் மார்ச் 31க்குள் ரூ.500 செலுத்தி புதுப்பித்துக் கொள்ளலாம் என்று அவர் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம்**

First Published : 05 Feb 2010 03:06:43 AM IST

தருமபுரி, பிப்.4: தருமபுரியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு வட்டச் செயலர் என்.கந்தசாமி தலைமை தாங்கினார். ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் 200 நாள் வேலை வழங்கக் கோரி, பிப்ரவரி 22-ம் தேதி தருமபுரி மாவட்டத்திலுள்ள வட்டாட்சியர் அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது, தருமபுரி மாவட்டத்துக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டுவது, நூறு சதவீத

மானியத்தில் கால்நடை தீவனங்களை கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சிபிஐ மாவட்ட செயற்குழு உறுப்பினர் தேவ.பேரின்பம், மாநில பொறுப்புச் செயலர் எம்.ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**பருவகால மாற்றங்களைத் தவிர்க்க இயற்கை வளத்தை பாதுகாக்க வேண்டும்**

First Published : 05 Feb 2010 09:34:18 AM IST

தஞ்சாவூர், பிப். 4: பருவகால மாற்றங்களைத் தவிர்க்க இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும் என்றார் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத் துணைவேந்தர் நல். ராமச்சந்திரன்.

பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தில் வியாழக்கிழமை தொடங்கிய பருவகால மாற்றம் குறித்த அறிவியல் கண்காட்சி மற்றும் கருத்தரங்குக்கு தலைமை வகித்து மேலும் அவர் பேசியது:

உலகின் முன் தற்போது இருக்கும் மிகப் பெரிய சவால் பருவகால மாற்றமும், புவி வெப்ப உயர்வும்தான். இந்தப் பல்கலைக்கழகம் ஒவ்வொரு பருவத்திலும் ஒரு நாளை புத்தாக்கச் சிந்தனை நாளாக கடைப்பிடித்து, துறை வாரியாக இயற்கைக்கு உகந்த பல்வேறு பொறியியல் வடிவமைப்புகளை வடிவமைத்து சமூகத்துக்கு தனது பங்களிப்பைச் செய்து வருகிறது.

ஒவ்வொரு துறையிலும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற செயல்களை செயல்படுத்தி, புவியைக் காப்பதும், சுற்றுச்சூழலுக்கு மாசு உண்டாக்கும் கரியமில வாயு உமிழ்வைத் தடுப்பதும் நம் ஒவ்வொருவரின் கடமையாகும். பெரியார் புரா திட்டத்தின் கீழ் 65 கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டு பல்வேறு சமூகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய அளவில் திட்டமிட்டபடி 7,000 புரா கிராமங்கள் மூலம், 26,208 மில்லியன் டன் கார்பன் உற்பத்தி தவிர்க்கப்பட்டுள்ளது. இது இந்திய மொத்த கார்பன் உற்பத்தியில் 19 சதமாகும்.

கழிவுப் பொருள்களை மறுசுழற்சி செய்தல், பசுமை இல்லங்களை அமைத்தல், ஆற்றல் தணிக்கை மேற்கொள்ளல் ஆகியவற்றின் மூலம் பெருமளவு கார்பன் உமிழ்வை  தவிர்க்கலாம் என்றார் நல். ராமச்சந்திரன்.

தொடக்க விழாவில் திருச்சி பெல் பொது மேலாளர் எஸ். கருணாகரன் (நவீனமயமாக்குதல் மற்றும் கட்டுமானத் துறை), மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வை. குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளரும், மின்னியல் துறைத் தலைவருமான பாலமுருகன் வரவேற்றார். பேராசிரியர் ஜெயக்குமார் நன்றி கூறினார். இந்த அறிவியல் கண்காட்சி சனிக்கிழமை (பிப். 6) வரை நடைபெறுகிறது.

**வேலூரில் நாளை தமிழக விவசாயிகள் சங்க மாநில மாநாடு**

First Published : 05 Feb 2010 03:17:55 AM IST

வேலூர், பிப்.4: வேலூரில் சனிக்கிழமை (பிப்ரவரி 6) தமிழக விவசாயிகள் சங்க மாநில மாநாடு நடைபெறுகிறது.

மறைந்த தமிழக விவசாயிகள் சங்க முன்னாள் தலைவர் நாராயணசாமி பிறந்த நாள் விழா ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவர் 6-ம் தேதி கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு பிறந்த நாளின் போது வேலூரில் சாரதாம்பாள் சீனிவாச

முதலியார் திருமண மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு மாநில மாநாடு நடைபெறுகிறது. சங்க மாநிலத் தலைவர் எம்.ஆர்.சிவசாமி தலைமை வகிக்கிறார்.

தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் ஏராளமான விவசாயக் கூலியாட்கள் விவசாயம் அல்லாத வேறு பணிகளுக்குத் திருப்பிவிடப்பட்டுள்ளனர். இதனால் விவசாய உற்பத்தி குறைகிறது. எனவே, விவசாயப் பணிக்கும் வேலை உறுதியளிப்புத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என இம்மாநாட்டில் வலியுறுத்தப்படும். மேலும், கரும்பு விலை டன்னுக்கு ரூ.2,500 நிர்ணயம் செய்யவேண்டும், தேசிய வங்கிக் கடன் தள்ளுபடி, கள் இறக்க அனுமதி, வனவிலங்குகளால் ஏற்படும் பாதிப்பு உள்ளிட்டவை குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படும் என வேலூர் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ராமதாஸ் தெரிவித்துள்ளார்

தினமலர்

**உணவு பொருள் , பணவீக்கம் தொடர்ந்து உயர்கிறது**

பிப்ரவரி 05,2010,02:38



புதுடில்லி: 'கடந்த மாதம் 23ம் தேதியுடன் முடிந்த 12 மாதங்களுக்கான, உணவுப் பொருட்கள் பணவீக்கம், 17.56 சதவீதம்' என, அரசு வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு சார்பில் வெளியிடப்பட்ட தகவல்: கடந்த 23ம் தேதியுடன் முடிந்த 12 மாதங்களுக்கான பணவீக்கம், 17.56 சதவீதம். அதற்கு முந்தைய வாரம், உணவுப் பொருட்கள் பணவீக்கம், 17.40 சதவீதமாக இருந்தது. முதன்மைப் பொருட்களுக்கான ஆண்டு பணவீக்க வீதம், 14.56 சதவீதமாக இருந்தது. அதற்கு முந்தைய வாரம், முதன்மைப் பொருட்களின் பணவீக்கம், 14.66 சதவீதமாக இருந்தது. முந்தைய ஆண்டு, இதே வாரத்தில், முதன்மைப் பொருட்களின் பணவீக்கம், 8.89 சதவீதமாக இருந்தது.பழங்கள், காய்கறிகள், முட்டை ஆகியவற்றின் விலை தலா, 1 சதவீதம் குறைவு மற்றும் தேயிலை விலை, 5 சதவீதம் குறைவு ஆகியவற்றால், முந்தைய வாரத்தில், உணவுப் பொருட்களின் குறியீட்டு எண், 0.1 சதவீதம் குறைந்தது. எனினும், காபியின் விலை, 5 சதவீதம், கோதுமை, பாசிப் பருப்பு மற்றும் பார்லி ஆகியவற்றின் விலை தலா, 1 சதவீதம் அதிகரித்தது. இவ்வாறு அந்த தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, 2010-11ம் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை, வரும் 26ம் தேதி தாக்கல் செய்ய உள்ளார். இதற்கிடையில், பிரதமர் மன்மோகன் சிங், அனைத்து மாநில முதல்வர்கள் கூட்டத்திற்கு நாளை ஏற்பாடு செய்துள்ளார். இக்கூட்டத்தில் அத்தியாவசியப் பொருட்கள் விலை உயர்வு குறித்து முக்கியமாக விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கூட்டம் ஏற்கனவே, கடந்த மாதம் 27ம் தேதி நடத்த திட்டமிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# விவசாய தண்ணீர் அளந்து பயன்படுத்த கருவி

## வேளாண் பல்கலையில் அறிமுகம்

**கோவை, பிப். 5 -**

வேளாண்மைக்குத் தேவையான தண்ணீர் எதிர்காலத்தில் குறைந்து விடும் அபாயம் உள்ளதால், தண்ணீரை அளந்து பயன்படுத்த உதவும் புதிய கருவி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

வேளாண்மைக்குத் தேவையான பாசன நீரை கணக்கிடும் புதிய கருவியை ஐதராபாத்தில் உள்ள நீர் மேலாண்மை நிறுவன விஞ்ஞானி ராமன் கண்டுபிடித்துள்ளார். இப்புதிய கருவியின் அறிமுக விழா கோவை வேளாண் பல்கலையில் நடந்தது. விழாவில் பல்கலை துணை வேந்தர் முருகேசபூபதி பேசியதாவது:

இந்தியாவில் முதல் முறையாக இக்கருவி உருவாக்கப்பட்டு, தமிழகத்தில் முதலில் அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. நுண்தொழில் நுட்பம் கொண்ட கால்குலேட்டரை பயன்படுத்தி, ஒவ்வொரு பயிருக்கும், பகுதிக்கும் ஏற்ப நீர் தேவையை சரியாக அளக்க முடியும்.

நீர் தேவை துல்லியமாக கணக்கிடப்படுவதால் 30 முதல் 40 சதவீதம் வரை பாசன நீர் இழப்பை தவிர்க்க முடியும்; பாசனத்துக்கான மின் தேவையும் குறைகிறது. விவசாயிகள் இக்கருவியை வாங்கி பயன்படுத்தி நீர் சிக்கனத்தை கடைபிடிக்கலாம்.

பெருகி வரும் மக்கள் தொகை, தொழிற்சாலைகளுக்கு அதிகளவில் தண்ணீர் பயன்படுத்தப்படுவது ஆகிய காரணங்களால், 2025ல் வேளாண் துறைக்கு தேவையான பாசன நீர் அளவு 73 சதவீதமாக குறைய வாய்ப்புள்ளது. தற்போது இதன் அளவு 85 சதவீதமாக உள்ளது. ஆகவே உடனடியாக நீர் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்க வேண்டும். இதற்கு, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன முறைகளை கடைபிடிப்பது அவசியம்.

ஆந்திரா, மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் தமிழகத்தில் அதிகமாக சொட்டு நீர் பாசன முறை கடைபிடிக்கப்படுகிறது. சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசன வசதிக்காக விவசாயிகளுக்கு தமிழக அரசு 65 சதவீத மானியம் வழங்கி வருகிறது. முன்பு இது 50 சதவீதமாக இருந்தது. எனவே விவசாயிகள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தண்ணீரையும் மின்சாரத்தையும் சேமிக்க வேண்டும்.

சொட்டு நீர் பாசனம் பற்றிய விழிப்புணர்வு விவசாயிகள் மத்தியில் அதிகரித்திருந்தாலும், ஒவ்வொரு பயிருக்கும் தேவையான சரியான தண்ணீர் அளவு பற்றி தெரியாமலே உள்ளனர். இதனால், சொட்டு நீர் பாசன முறையில் விவசாயிகள் 30 முதல் 50 சதவீதம் கூடுதல் தண்ணீரை பயன்படுத்துகின்றனர். இப்பிரச்னைக்கு தீர்வு காண, புதிய கருவி உதவும்.

இவ்வாறு, துணைவேந்தர் பேசினார்.

நீர் மேலாண்மை நிபுணர் ராமன், நீர் தொழில் நுட்ப மைய இயக்குனர் செல்லமுத்து உட்பட பலர் பங்கேற்றனர்.




தண்ணீரை அளந்து பயன்படுத்த உதவும் புதிய கருவியை கோவை வேளாண் பல்கலையில் துணைவேந்தர் முருகேச பூபதி அறிமுகம் செய்து வைத்தார். அருகில் நீர் மேலாண்மை நிபுணர் ராமன், சர்வதேச நீர் மேலாண்மை நிறுவன இயக்குனர் பழனிசாமி.

**செண்டு மல்லி கிலோ ரூ.6**

திண்டுக்கல்:அதிக பனிப்பொழிவால்,பூக்களின் வரத்து பாதிப்படைந்துள்ளது. தற்போது முகூர்த்த தினம் இல்லாமல்,வியாபாரிகள் வருகை குறைந்ததோடு பூக்களின் விலையும் சில நாட்களாக குறைந்து வருகிறது. நேற்று செண்டுமல்லி ஒரு கிலோ ஆறு ரூபாய்க்கு விற்கப்பட்டதால்,விவசாயிகள் கவலை அடைந்தனர். நேற்றைய நிலவரப்படி மல்லிகை 250 ரூபாய்க்கும், கனகாம்பரம் 200 ரூபாய்க்கும் விற்பனையானது. காக்கரட்டான் 120,சம்மங்கி 80, அரளி 50, செவ்வந்தி 30க்கு விற்றது.

**விவசாய கண்காட்சியில் எல்லாம் இயந்திர மயம்**

மதுரை:சென்னை டிரேட் ஈவென்ட்ஸ் சார்பில், மதுரை காந்தி மியூசியத்தில் விவசாயக் கண்காட்சி, பிப்., 7ம் தேதி காலை 10 முதல் மாலை 6 மணி வரை நடக்கிறது. அனுமதி இலவசம்.மியூசிய செயலாளர் ரங்கசாமி துவக்கி வைத்தார். டிரேட் ஈவென்ட்ஸ் நிர்வாக இயக்குனர் இளங்கோ, விற்பனை இயக்குனர் தர்மகுமார் பங்கேற்றனர்.விவசாயத்தில் உழவு முதல் அறுவடை, தரம்பிரிப்பது வரையான அனைத்து கருவிகள், மின் வேலிகள் பல்வேறு நிறுவனங்களின் சார்பில் கண் காட்சியில் இடம்பெற்றன.

இக்கருவிகளுக்கு அரசு மானியம் கிடைக்கிறது. விவசாயம் தொடர்பான புத்தகங்கள், காய்கறிகள், பழங்களின் விதைகள், பூச்செடிகள், ஒட்டுவகை பழச்செடிகள், குட்டைரக தென்னைகள், திசு வளர்ப்பு முறை வாழை நாற்றுகள், பதப்படுத்தப் பட்ட நெல்லி பொருட் கள், கடற்பாசி திரவ உரம், பால் கறவை இயந்திரம் விற்பனைக்குள்ளன. காபி போர்டு, மதுரை விவசாயக் கல்லூரி, விற்பனை வேளாண் பிரிவின் சார்பில் விழிப்புணர்வு ஸ்டால்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஐ.டி.பி.ஐ., ஐ.சி.ஐ.சி.ஐ., ஸ்டால்களில் வங்கி கடன் பெற அணுகலாம்.

**பருத்தி விதை மானிய விலையில் விற்பனை: வேளாண் அலுவலர் தகவல்**

ராசிபுரம்: "எலச்சிபாளையம், வேலகவுண்டம்பட்டி வேளாண் விரிவாக்க மையத்தில் மானிய விலையில் பருத்தி விதை விற்பனை செய்யப்படுகிறது' என, வட்டார வேளாண் உதவி இயக்குனர் லோகநாதபிரகாசம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: எலச்சிபாளையம் வட்டாரத்தில் வரும் மாசிப்பட்ட பருத்தி சாகுபடிக்கு சுரபி ரகம் மிகவும் ஏற்றது. சான்றிதழ் பெற தரமான சான்று விதைகளையே உபயோகப்படுத்த வேண்டும். எலச்சிபாளையம் மற்றும் வேலகவுண்டம்பட்டி வேளாண் விரிவாக்க மையங்களில் தேவையான அளவு பருத்தி சுரபி சான்று விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. பருத்தி தொழில்நுட்ப மினிமிஷன் திட்டத்தின் கீழ் ஒரு கிலோ விதைக்கு 20 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு பஞ்சுடன் கூடிய விதை 6 கிலோ போதுமானது. பஞ்சு நீக்கி விதைப்பு செய்ய அமில விதை நேர்த்தி செய்யவேண்டும். அதற்கு ஒரு கிலோ விதைக்கு 100 மில்லி அடர் கந்தக அமிலம் சேர்த்து இரண்டு நிமிடங்கள் நன்கு கிளறி நான்கு முதல் ஐந்து முறை நல்ல நீரினால் விதைகளை கழுவ வேண்டும். பொக்கு விதைகளைப் பொறுக்கி அகற்றிவிட்டு நல்ல விதைகளை உலர வைத்து அதன்பின் ரசாயன அல்லது உயிரியல் பூஞ்சான விதை நேர்த்தி மற்றும் உயிர் உர விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

ரசாயன பூஞ்சான விதை நேர்த்தி முறைக்கு ஒரு கிலோ விதைக்கு இரண்டு கிராம் கார்பண்டாசிம் மருந்தை கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து அதன் பின்பு விதைக்க வேண்டும். உயிரியல் பூஞ்சான விதை நேர்த்தி முறைக்கு ஒரு கிலோ விதைக்கு நான்கு கிராம் டிரைகோடெர்மாவிரிடி மருந்தை கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து அதன் பின் உயிர்உர விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். உயிர் உர விதை நேர்த்திக்கு ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் ஒரு பொட்டலம் அசோஸ்பைரிலம், ஒரு பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரத்தை நன்கு உலர்ந்த கஞ்சியில் கலந்து அரைமணி நேரம் நிழலில் உலர்த்தி பின் விதைக்க வேண்டும். பருத்தி விதைகள் தேவைப்படும் விவசாயிகள் எலச்சிப்பாளையம் மற்றும் வேலகவுண்டம்பட்டி வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி மானிய விலையில் பெற்று பயன்பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழகம், கேரளாவில் முட்டை விலை 232 காசு**

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை 232 காசாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாமக்கல்லில் தேசிய முட்டை விலை நிர்ணயக்குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, ஏற்றுமதி குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். 230 காசுக்கு விற்பனை செய்து வந்த முட்டை 2 காசு உயர்த்தி 232 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரமாக முட்டை சரிவில் இருந்த நிலையில், நேற்று அதன் விலை 2 காசு உயர்ந்திருப்பது, பண்ணையாளர்களை மகிழ்ச்சியடைச் செய்துள்ளது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: ஹைதராபாத் 225 காசு, விஜயவாடா, தனுகு 225 காசு, நெல்லூர், சித்தூர் 233 காசு, சென்னை 240 காசு, மைசூர் 230 காசு, பெங்களூரு 232 காசு, மும்பை 248 காசு, டில்லி 240 காசு, கோல்கத்தா 255 காசு. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டைக்கோழி விலை 25 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கறிக்கோழி விலை கிலோ 65 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது.

**நெல் கொள்முதல் நிலையத்தில் இடைத்தரகர்கள் ஆதிக்கம் :தொடரும் அவலநிலைக்கு விடிவு எப்போது?**

ராமநாதபுரம்:மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் நெல் கொள்முதல் நிலையங்களில் இடைத்தரகர்கள் ஆதிக்கம் செலுத்துவது தொடரும் நிலையில், விவசாயிகள் பாதிக்கப்படுவது தொடர்கிறது. வறண்ட ராமநாதபுரம் மாவட்டத்தில் கிடைக்கும் நீரை வைத்து வலது, இடது பிரதான கால்வாய் மூலம் விவசாயம் மேற்கொள்ளும் அவல நிலையில் இங்குள்ள விவசாயிகள் உள்ளனர்.

பல்வகை விவசாயம் இங்கு மேற்கொள்ளப்பட்டாலும், நெல் விவசாயமே இங்கு பிரதானமாக உள்ளது. நீர் பற்றாக்குறை ஒரு புறம் இருக்க, ஆண்டுக்கு ஒரு புதிய நோய் தாக்கி பயிர்கள் சேதமடைவதும், பயிர் காப்பீடு வேண்டி காலத்தை கடத்துவதும் இம்மாவட்ட விவசாயிகளின் தலையெழுத்தாக உள்ளது. கதைகளில் வருவதை போல, ஒவ்வொரு கசப்பான காலகட்டத்தையும் கடந்து, ஒரு வழியாக அறுவடை செய்து நெல்மணிகளை விற்கும் போது, அதற்கு ஏற்ப விலை கிடைப்பதில்லை.

அரசு தரப்பில் திறக்கப்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சென்றால், அங்குள்ளவர்கள் இடைத்தரர்களிடம் ரகசிய ஒப்பந்தம் செய்து, விவசாயிகளை இழுத்தடிக்கின்றனர். "எடை குறையும்' அச்சத்தில், விவசாயிகளும் வேறு வழியின்றி இடைத்தரகர்களிடமே, தங்களை நெற்களை சொற்ப விலைக்கு விற்றுச்செல்கின்றனர். இதை சாதமாக்கும் இடைத்தரர்கள், அறுவடை செய்யும் கையோடு , வயல்வெளியிலேயே விலையை நிர்ணயித்து கொள்முதல் செய்கின்றனர்.

இவர்களோ இதை, நெல் கொள்முதல் நிலையங்களில் விற்று நல்லலாபம் பார்க்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் தொடரும் இந்நிலையும், இப்பகுதியில் விவசாயம் பொய்த்து போக ஒரு காரணம் ஆகும்.இது தொடர்பாக புகார் எழும் போதும், அதை கண்டுகொள்ளாமல் அமைதி காக்கும் அதிகாரிகளின் செயலால் விவசாயிகளும் நம்பிக்கை இழந்துள்ளனர். இந்த ஆண்டும், விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்வதற்காக 10 இடங்களில் நிலையங்கள் திறக்க உள்ளனர். இம்முறையாவது அவை முறையாக செயல்பட மாவட்ட நிர்வாகம் கண்காணிப்பை அதிகரிக்க வேண்டும்.

**மாவட்டத்தில் 900 ஏக்கரில் மிளகாய் சாகுபடி அமோகம் : ஏக்கருக்கு பத்து டன் கிடைப்பதால் மகிழ்ச்சி**

தேனி : மாவட்டத்தில் 900 ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டு ஏக் கருக்கு பத்து டன்னுக்கு மேல் அமோக உற்பத்தி கிடைத்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
சில ஆண்டுகளுக்கு முன்பு வரை 1500 ஏக்கரில் நடந்த மிளகாய் சாகுபடி படிப்படியாக குறைந்தது. கடந்த ஆண்டில் இது, வெறும் 500 ஏக்கராக இருந்தது. இந்நிலையில் தோட்டக்கலைத்துறையின் தீவிர முயற்சியாலும், வீரிய ஒட்டு ரகங்களின் வருகையாலும் நடப்பு ஆண்டில் 900 ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப் பட்டுள்ளது. வீரிய ஒட்டு ரகங்களான என்.எஸ்.1702, பிரியங்கா, கோல்டன், யு.எஸ்.611, 612 ஆகியவை அதிக விளைச்சலை கொடுத் துள்ளன.
இதற்கு முன் ஏக்கருக்கு ஐந்து, ஆறு டன் வரை கிடைத்த உற்பத்தி, தற்போது பத்து டன் ஆக அதிகரித்துள்ளது. வீரிய ஒட்டு ரகங்கள் நாற்பது நாட்களில் விளைச்சலை தரும் குறுகிய கால பயிராக உள்ளது. இதன் மூலம் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை பச்சை மிளகாய் பறிப்புக்கு வருவதாலும், தொடர்ந்து ஓராண்டு வரை சீரான மகசூலை பெற முடியும் என்பதாலும், விலை சீராக இருப்பதாலும் விவசாயிகள் மிளகாய் சாகுபடியில் ஆர்வம் காட்டத்துவங்கி உள்ளனர்.
தேனி அருகே அரப்படித்தேவன்பட்டி, திருமலாபுரம், கோவிந்தநகரம், அம்பாசமுத்திரம், கண்டமனூர் மற்றும் சின்னமனூர் பகுதிகளில் அதிக அளவில் பயிரிட்டுள்ளனர். மாவட்டத்தில் தற்போது நிலவும் பனிப்பொழிவால் செடிகளுக்கு போதிய நீரை கொடுப்பதால் பச்சை மிளகாய் உற்பத்தியை இருமடங்காகி விட்டதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
தோட்டக்கலை அதிகாரிகள் கூறுகையில், வீரிய ஒட்டு ரகங்கள், துள்ளிய பண்ணை திட்டம், சொட்டுநீர்ப்பாசனம்,

மற்றும் நீரில் கரையும் உரங்களை பயன்படுத்துவதாலும் விளைச்சல் அதிகரித்துள்ளது என்றனர்.
இங்கு விளையும் மிளகாயின் காரத்தன்மை 7.6 சதவீதமாக உள்ளதால், கேரளாவுக்கு அதிக அளவில் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. இது தவிர மதுரை, சிதம்பரம், கோவை, கடலூர், நாகை மாவட்டங்களில் இருந்தும் வியாபாரிகள் இங்கு வந்து மொத்தமாக வாங்கி செல்கின்றனர். கடந்த இரு மாதங்களாக கிலோ 18 முதல் 20 ரூபாய் வரை விற்ற மிளாகாய், தற்போது 20 முதல் 22 ரூபாய் வரை விற்கிறது. இதனால் மிளகாய் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் வரும் ஆண்டில் 19 ஆயிரம் ஹெக்டேரிலும் செம்மை நெல் சாகுபடி**

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் வரும் ஆண்டில் மொத்த நெல் சாகுபடி பரப்பிலும் செம்மை நெல் சாகுபடி செய்யப்படும். அந்த அளவிற்கு இந்த திட்டம் விவசாயிகள் மத்தியில் வேளாண்மைத்துறையில் நல்ல ஈடுபட்டால் விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றிருப்பதாக பல்வேறு இடங்களில் நேரடி ஆய்வு செய்த கலெக்டர் தெரிவித்தார்.
தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண்மைத்துறை சார்பில் நடக்கும் பணிகளை நேற்று கலெக்டர் பிரகாஷ் ஆய்வு செய்தார். பழையகாயல், முக்காணி, பேரூர், ஆறுமுகனேரி, அங்கமங்கலம், குறுங்காட்டூர், கூட்டுடன்காடு ஆகிய இடங்களில் அவர் நேரடியாக ஆய்வு செய்தார். அந்த பகுதியில் இருந்த விவசாயிகளிடமும் அரசின் உதவி திட்டங்கள், விவசாயத்திற்கு தேவையான விதை, உரம் உள்ளிட்டவை குறித்த காலத்தில் கிடைக்கிறதா என்று கேட்டார். அனைத்தும் நல்ல முறையில் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.
வேளாண்மை இணை இயக்குநர் லூயிஸ் ராஜரத்தினம், ஆத்மா திட்ட நோடல் அதிகாரி ஜோசப் நஸ்ரேன் பிரேம், துணை இயக்குநர் ரஞ்சித் தனராஜ், புதுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயசுந்தர், விவசாய அதிகாரிகள் பாலசிங், ராமலிங்கம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) தனசிங்டேவிட், குணபாலன் (தரக்கட்டுப்பாடு), உதவி இயக்குநர்கள் சூசைஅந்தோணி, கிருஷ்ணபிள்ளை, பாரதி, விவசாய அதிகாரி மார்டின்ராணி, உதவி வேளாண்மை அலுவலர் ராமசுப்பு மற்றும் பலர் கலந்து கொண்டனர். கூட்டுடன் காட்டில் செம்மை நெல் சாகுபடியை பார்வையிட்ட கலெக்டர் அங்கு சாகுபடி நல்ல முறையில் இருப்பதை பார்த்து குளத்து பாசனத்தில் உள்ள நெல் பயிரே இந்த அளவிற்கு இருக்கிறது என்று கூறினார். உடனே அந்த பகுதி முழுவதிலும் உள்ள வயல் வெளிக்கு சென்ற அவர் முழு விபரத்தை கேட்டார். அந்த பகுதியில் விவசாய பணிகளில் ஈடுபட்டிருந்த பெண் விவசாயிகளிடமும் செம்மை நெல்சாகுபடி முறை குறித்து கேட்டார்.
பின்னர் கலெக்டர் வயல்வெளி பகுதியில் நிருபர்களிடம் கூறியதாவது; தூத்துக்குடி மாவட்டத்தில் 2009-2010ம் ஆண்டில் நெல் சாகுபடி பரப்பு குறியீடு 19 ஆயிரம் ஹெக்டேர். இதுநாள் வரை 19 ஆயிரத்து 81 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நெல் சாகுபடியில் உற்பத்தி திறனை அதிகரித்து அதிக வருவாய் கிடைத்திடும் பொருட்டு, இம் மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடி செய்ய அரசு உத்தரவிட்டது. இதன்படி 8 ஆயிரத்து 200 ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் இலக்கை மிஞ்சி 8 ஆயிரத்து 230 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இம் மாவட்ட வேளாண்மைத்துறையில் இது சாதனையாகும். வரும் ஆண்டில் 2010-2011ம் ஆண்டில் முழு சாகுபடி பரப்பிலும் செம்மை நெல் சாகுபடி செய்வதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை நிச்சயம் இம் மாவட்டம் நிறைவு செய்யும். இதன் மூலம் வழக்கமான நெல் உற்பத்தியை விட கணிசமாக இதன் உற்பத்தி அதிகரிக்கும். தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் வேளாண் மருந்தகம் (அக்ரிகிளினிக்) இம் மாவட்டத்தில் உள்ள 12 வட்டாரங்களிலும் தலா ஒன்று அமைக்க முடிவு செய்யப்பட்டு இதுவரை 5 வட்டாரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள இடங்களில் அமைக்கும் பணி வேகமாக நடந்து வருகிறது. இந்த கிளினிக்கிற்கு சிறு மண் ஆய்வு கூடத்திற்கு தேவையான இயந்திரங்கள் 6 லட்சத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டு அதில் மூன்று லட்ச ரூபாய் அரசு மானியமாக வழங்கியுள்ளது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.
வேளாண்மைத்துறை அதிகாரிகள் வட்டாரத்தில் கூறியதாவது; தூத்துக்குடி மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடியினை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு பல்வேறு திட்டங்களில் விவசாயிகளுக்கு மானியம் வழங்கிவருகிறது. ஆத்மா திட்டத்தில் மட்டும் ஒரு ஏக்கர் அளவுள்ள செயல் விளக்க திடல் 500

அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு செயல்விளக்க திடலுக்கு 4 ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.
தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டேர் அளவில் 600 எண்ணம் செம்மை நெல் சாகுபடி செயல்விளக்க திடல் அமைக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் தலா 3 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.
ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 25 ஏக்கர் பரப்பில் 11 செம்மை நெல் சாகுபடி தொகுப்பு செயல்விளக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் ஒரு ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய் வீதம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
இம் மாவட்டத்தில் 70 டன் வாப் பண்ணை மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு 7 ஆயிரத்து 400 ரூபாய் வீதம் செம்மை நெல் சாகுபடி உபகரணங்கள் குழு மூலமாக வாடகை அடிப்படையில் விவசாயிகளுக்கு அளிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

**கீழப்பாவூரில் 9ம் தேதி குண்டாறு பாசன மேலாண்மை திட்ட கருத்தரங்கு**

திருநெல்வேலி : கீழப்பாவூரில் வரும் 9ம் தேதி குண்டாறு பாசன மேலாண்மை திட்ட கருத்தரங்கு நடக்கிறது. நெல்லை மண்டல வேளாண்மை இன்ஜினியரிங் துறையின் சார்பில் குண்டாறு, சிற்றாறு, கருப்பா நதி திட்டம் பாசன பகுதி மேன்மை மற்றும் நீர் மேலாண்மை திட்ட பயிலரங்கு கீழப்பாவூர் டவுன் பஞ்., சமுதா நலக் கூடத்தில் வரும் 9ம் தேதி காலை 9.30 மணிக்கு நடக்கிறது.
கண்காணிப்பு இன்ஜினியர் தமிழ்செல்வன் தலைமை வகிக்கிறார். கீழப்பாவூர் டவுன் பஞ்., தலைவர் பொன் அறிவழகன் முன்னிலை வகிக்கிறார். உதவி செயற்பொறியாளர் மனோகரன் வரவேற்கிறார். இதில் செயற்பொறியாளர்கள் ஜான் நிர்மலன், சந்திரன், சம்பத், தோட்டக் கலை துணை இயக்குனர் கச்சிஜமால், கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் ராமானுஜம், மின்வாரிய செயற்பொறியாளர் பாஸ்கரன், தோட்டக்கலை உதவி இயக்குனர் பாலசுப்பிரமணியன், மீன்வளத் துறை உதவி இயக்குனர் பிரபாவதி, முன்னோடி பாங்க் மேலாளர் ஜான் பெலிக்ஸ் பெர்னாண்டோ உட்பட பலர் பேசுகின்றனர். உதவி செயற்பொறியாளர் சுப்பிரமணியன் நன்றி கூறுகிறார்.

**வேளாண் திட்டங்கள் அதிகாரி நேரில் ஆய்வு**

கே.வி.குப்பம்: கே.வி.குப்பம் வேளாண் துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு செய்தார்.

கே.வி.குப்பம் அடுத்த கவசம்பட்டு, வடுகந்தாங்கல், பில்லாந்திப்பட்டு ஆகிய கிராமங்களில் வேளாண் துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களை வேலூர் வேளாண்மை இணை இயக்குனர் அறிவுமணி நேரில் சென்று ஆய்வு செய்தார். மேலும் செம்மை நெல்சாகுபடி செயல் விளக்கத்தை பார்வையிட்டார்.கே.வி.குப்பம் வேளாண்மை உதவி இயக்குனர் அண்ணாதுரை விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானிய திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப பயிற்சிகள் குறித்து வேளாண்மை இணை இயக்குனர் அறிவுமணியிடம் தெரிவித்தார்.

**மரபணு மாற்றிய காய்கறி விதைவிவசாய நிலங்களை பாதிக்கும்: மத்திய அரசுக்கு பறந்தது மனு**

திருப்பூர் : "மரபணு மாற்றம் செய்யப்பட்ட காய்கறி விதைகள், நம் நாட்டின் பாரம்பரிய காய்கறி பயிர்களையும், விவசாய நிலங்களையும் பாதிக்கும்' என்று எச்சரிக்கை விடுத்து, மத்திய அமைச்சருக்கு மனு அனுப்பப்பட்டுள்ளது.இந்தியாவில் மரபணு மாற்றப்பட்ட காய்கறி பயிர் விதைகளை அறிமுகப்படுத்த, அமெரிக்க நிறுவனங்கள் முயற்சி மேற்கொண்டுள்ளன. புழு, பூச்சி தாக்குலை தவிர்க்க வேண்டும் என்ற நாக்கத்தில், மரபணு மாற்றம் செய்யப்பட்ட காய்கறிகளை அறிமுகப்படுத்துவதால், மனிதர்களுக்கு ஆபத்து ஏற்படும். காய்கறிகளை வேக வைக்காமல் சாப்பிட்டால், அதிலுள்ள வைரஸ் விஷம் மனிதனை கடுமையாக தாக்கும்.

இவ்வகை காய்கறிகள் பயிரிடப்படும் நிலமும், சில ஆண்டுகளில் விஷத்தன்மை உடையதாக மாறிவிடும் என்று இயற்கை ஆர்வலர்கள் கூறுகின்றனர். இக்காய்கறிகளை தொடர்ந்து சாப்பிட்டால், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து விடும் என்று டாக்டர்கள் தெரிவிக்கின்றனர்.இருப்பினும், மத்திய அரசு, "பி.டி.,' கத்திரிக்காயை அறிமுகப்படுத்த ஆர்வம் காட்டி வருகிறது. "பி.டி.,' கத்திரிக்காயில் வைரஸ் விஷம் இருப்பதை ஒப்புக்கொண்டுள்ள மத்திய அரசின் நிபுணர் குழு, "நன்கு வேக வைத்தால் விஷத்தன்மை மாறி விடும்' என்ற விதை நிறுவனங்களின் கூற்றையும் ஏற்றுக்கொண்டுள்ளது. இதையடுத்து, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெயராம் ரமேஷ், இந்த கத்திரிக்காயை அறிமுகப்படுத்துவது தொடர்பாக கருத்து கேட்பு கூட்டங்களை நடத்தி வருகிறார். இதற்கு, திருப்பூர் தினசரி காய்கறி உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர் பாதுகாப்பு சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. இச்சங்கம் சார்பில், மத்திய சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைச்சருக்கு மனு அனுப்பப்பட்டுள்ளது.அதில், "மரபணு மாற்றப்பட்ட காய்கறி விதைகளை அறிமுகப்படுத்தினால், நம்முடைய பாரம்பரிய காய்கறி பயிர்களையும், நிலத்தையும் பாதிக்கும். உணவு பாதுகாப்புக்கும் உத்தரவாதம் இல்லாத நிலை ஏற்படும். எனவே, "பி.டி.,' கத்திரிக்காய் மற்றும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட காய்கறி விதைகளை அறிமுகப்படுத்தக்கூடாது; இந்நடவடிக்கையை மத்திய அரசு கைவிட வேண்டும்,' என்று கூறப்பட்டுள்ளது.

தினகரன்

**தக்காளி இறால் சீசன் துவக்கம்**

பதிவு செய்த நாள் 2/5/2010 1:10:08 AM



காரைக்கால் : காரைக்கால் கடல் பகுதியில் ஜனவரி& மார்ச் மாதம் வரை மீனவர்கள் வலையில் தக்காளி நிறத்திலான இறால்கள் அதிகளவில் கிடைக்கும். கடந்த மாதம், மழை மற்றும் பனிப்பொழிவு காரணமாக தக்காளி இறால் சிக்கவில்லை. தற்போது தக்காளி இறால்கள் அதிகமாக கிடைக்கின்றன. கடந்த 3 நாட்களாக சராசரியாக ஒவ்வொரு படகிலும் 500 கிலோ முதல் 1,000 கிலோ வரை கிடைக்கிறது. ஒரு கிலோ ரூ.100 முதல் ரூ.120 வரை விற்பனை செய்யப்படுகிறது.

மொத்த வியாபாரிகள் இதை வாங்கி சென்னை, தூத்துக்குடிக்கு அனுப்புகின்றனர். அங்கிருந்து கப்பலில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெளிநாடுகளில் கிலோ ரூ.300 முதல் 400 வரை விற்பனை செய்யப்படுகிறது.

## தேங்காய் வரி பாக்கி ரூ.90.6 கோடி தள்ளுபடி

பதிவு செய்த நாள் 2/5/2010 1:09:33 AM



திண்டுக்கல் : வெளி மாநிலங்களுக்கு விற்கப்படும் தேங்காய்களுக்கு மத்திய விற்பனை வரி விதிக்கப்பட்டு வந்தது. இதற்கு விலக்கு தர வேண்டுமென தமிழ்நாடு தேங்காய் உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர்கள் கோரி வந்தனர். இந்நிலையில், வரி விலக்கு அளிக்க மதுரை விற்பனைவரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் 2002ல் உத்தரவிட்டது.

இதையடுத்து, தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு 2வது அட்டவணையில் உள்ள கொப்பரைத் தேங்காய்க்கு தொடர்ந்து வரிவிதிப்பது என்றும், 3வது அட்டவணையில் 'பி' வரிசையில் தேங்காய்க்கு வரிவிலக்கு அளித்தும் அரசு உத்தரவிட்டது. இதன்படி, 2002 ஏப்ரல் 1 முதல் 2006 செப்டம்பர் 5ம் தேதி வரை மத்திய விற்பனை வரி நிலுவை மற்றும் அதற்கான அபராதத்தொகை ரூ.90 கோடியே 60 லட்சத்து 30,552ஐ தள்ளுபடி செய்து தமிழக அரசு உத்தரவிட்டது.

இதனால், மாநிலம் முழுவதும் உள்ள தேங்காய் விவசாயிகள், விற்பனையாளர்கள் பயனடைந்துள்ளனர். முதல்வர் கருணாநிதிக்கும், கண்காணிப்புக்குழு உறுப்பினர்களுக்கும், தமிழ்நாடு தேங்காய் உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர் சங்க மாநிலத் தலைவர் அழகர்சாமி, செயலாளர் பட்டீஸ்வரன், பொருளாளர் அண்ணாமலை நன்றி தெரிவித்துள்ளனர்.

## பயறு வகைகளில் அதிக மகசூல் பெற ஆலோசனை

பதிவு செய்த நாள் 2/5/2010 5:16:18 AM

சிவகங்கை : பயறு வகை பயிர்களில் மகசூல் அதிகரிக்க கூட்டு நுண்சத்து தெளிக்க வேண்டும் என வேளாண்மைத்துறை யோசனை தெரிவித்துள்ளது.
உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை உதவி இயக்குநர் லயோலா அன்புக்கரசி கூறியதாவது: உளுந்து, பாசிப்பயிறு, தட்டை பயிறு போன்ற பயறு வகை பயிர்கள் விதைத்த 25முதல் 35நாட்களில் பூ பூத்து காய் பிடிக்கும். அச்சமயத்தில் பயிர்களுக்கு தழைச்சத்து அதிக அளவில் தேவைப்படுகிறது. குறுகிய காலத்தில் தேவையான சத்தை கொடுக்க வேண்டியதிருப்பதால், அந்த சத்தினை இலைவழி ஊட்டமாக பயிருக்கு தெளித்தால் நல்ல பலன் கிடைக்கும்.
கூட்டு நுண்சத்து என்பது டிஏபி, அமோனியம் சல்பேட் மற்றும் போராக்ஸ் கலந்த கலவையாகும். ஒரு ஹெக்டேர் பயிருக்கு தெளிக்க 2.5கிலோ டிஏபி, ஒரு கிலோ அம்மோனிீயம் சல்பேட் மற்றும் அரை கிலோ போராக்சை 37லிட்டர் தண்ணீரில் 12மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்னர் வடிகட்டினால் 35லிட்டர் கரைசல் கிடைக்கும். இதனுடன் 465 லிட்டர் தண்ணீர் கலந்து கிடைக்கும் 500லிட்டர் கரைசலை ஒரு ஹெக்டேர் பரப்பில் தெளிக்க வேண்டும்.

இந்த கரைசலை காய்பிடிக்கும் சமயம் அதாவது விதைத்த 25 முதல் 35 நாட்களில் தெளிக்க வேண்டும். இதனால் பூ உதிர்வது தடுக்கப்பட்டு அதிகளவில் காய் பிடிப்பதுடன் திரட்சியான மணிகள் தோன்றும்.
எனவே விவசாயிகள் பயறுவகை பயிர்களுக்கு ஒருங்கிணைந்த பயிர் ஊக்கிகளை தெளித்து மகசூலை பெருக்கி கொள்ளலாம்.
இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**உழவர்சந்தை அடையாள அட்டை வழங்கல்**

பதிவு செய்த நாள் 2/5/2010 5:08:20 AM

திண்டுக்கல் : ஆத்தூர் வட்டாரத்தில் காய்கறிகள் சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் நிலத்தில் விளையும் விளை பொருட் களை அருகில் உள்ள சின்னாளபட்டி உழவர்சந்தையில் விற்பனை செய்யலாம். இதற்காக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே இந்த வாய்ப்பை பயன்படுத்தி விவசாயிகள் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வேளாண்மை துணை இயக்குனர் மணியம் தெரிவித்துள்ளார்.

**இந்தியாவின் சர்க்கரை இறக்குமதி 70 லட்சம் டன்னாக இருக்கும்**

*நடப்பு 2009–10–ஆம் ஆண்டு சர்க்கரை பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) இந்தியா 70 லட்சம் டன் சர்க்கரை இறக்குமதி செய்ய வாய்ப்புள்ளது என ஜெர்மனியைச் சேர்ந்த ஆய்வு நிறுவனமான எஃப்.ஓ. லிச்ட் தெரிவித்துள்ளது.*

*பிரேசில்*

*சர்வதேச அளவில், தென் அமெரிக்காவைச் சேர்ந்த பிரேசில் நாடு சர்க்கரை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முதல் இடத்தில் உள்ளது. இந்தியா சர்க்கரை உற்பத்தி மற்றும் பயன்பாட்டில் இரண்டாவது இடத்தில் இருந்து வருகிறது. நடப்பு பருவத்தில் பிரேசில் நாட்டில் கரும்பு உற்பத்தி 3.50 கோடி டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நாட்டில் வரும் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் கரும்பு உற்பத்தி மேலும் அதிகரித்து 5 கோடி டன்னாக உயரும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.*

*பிரேசில் நாட்டில் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் நிலையில் சர்வதேச சந்தையில் சர்க்கரை அளிப்பு அதிகரிக்கும். இதனால் சர்க்கரை விலை குறையவும் வாய்ப்புள்ளது. எனினும், நடப்பு ஆண்டில் இந்தியா, பாகிஸ்தான், தாய்லாந்து மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகளில் சர்க்கரை உற்பத்தி சரிவடையும் நிலை உள்ளது. இதனால், நடப்பு பருவத்தில், உலக அளவில் சர்க்கரை உற்பத்தியில் சுமார் 20 லட்சம் டன் குறையும் என எஃப்.ஓ. லிச்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது. முன்னர், இந்நிறுவனம் உலக நாடுகளின் சர்க்கரை உற்பத்தி 15.74 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிட்டிருந்தது. சர்வதேச அளவில் சர்க்கரை பயன்பாடு 16.54 கோடி டன்னாக உள்ளது. ஆக, நடப்பு பருவத்தில் 80 லட்சம் டன் சர்க்கரைக்கு பற்றாக்குறை ஏற்படும் என்று தெரிகிறது.*

*பாகிஸ்தான்*

*ஆசியாவில், சர்க்கரை பயன்பாட்டில் பாகிஸ்தான் நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. இங்கும் சர்க்கரை உற்பத்தி குறையும் நிலை உள்ளது. இந்நாடு நடப்பு ஆண்டில் கூடுதலாக 7 லட்சம் டன் சர்க்கரையை இறக்குமதி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டில் சர்க்கரை விலை உயர்வை தடுக்கவும், தேவைப்பாட்டை ஈடு செய்யவும் பாகிஸ்தான் சர்க்கரை இறக்குமதியை அதிகரிக்க உள்ளது என எஃப்.ஓ. லிச்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*நடப்பு பருவத்தில் பல நாடுகளில் சர்க்கரை உற்பத்தி சற்று சரிவடையும் நிலை உள்ளது. என்றாலும், வரும் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் இந்தியா, பாகிஸ்தான், தாய்லாந்து ஆகிய நாடுகளில் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிக்கும் என இந்நிறுவனம் அதன் ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.*